# தியானலிங்கம்




**சிவசந்தியில் நிற்பதைவிட சிறந்தது**
**சற்குரு சந்நிதியில் நிற்பது.**

–திருமூலர்

## பிராணபந்தன யோகம்
## (பிராண பிரதிஷ்டை)

**தியானலிங்கம்** இந்த அழகிய, அரிய, புனித தமிழ் சொல்லை நம்மில் பல அறிய வாய்ப்பு குறைவு. ஏனெனில் நமது சமூகத்தில் நம்மை பஜனை, பூஜை, யாகம், மந்திரம், தந்திரம், இயந்திரம் இவைகளைத் தான் நாம் பக்தி என்ற பெயரிலும் சொல்லிலும், செயலிலும் ஈடுபடுத்து இது தான் பக்தி என்று சொல்லி நம்பவைத்து விட்டார்கள். அது மட்டும் இல்லாமல் **தியானம்** என்பது முனிவர்களும் ஞானிகளும் செய்வது என்பதையும் நினைத்து விட்டார்கள். சைவ சித்தாந்தில் மட்டுமே தியானம் என்பது பக்தியில் ஓர் முதல் அங்கம்! என்பதும் மற்றவைகள் இரண்டாம் பட்சம் என்று சொல்வது மட்டும் அல்லாமல், அது அவசியம் என்பதற்காக சிவபெருமானை உருவகப்படுத்தும் போது அவர் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதாக வடநாட்டு ஓவியர் பல அழகிய படங்களில் நமக்கு கிடைக்கும்படி செய்துள்ளார்கள்.

தென்நாட்டின் ஓவியர்களும் தென்முக கடவுளாக தக்ஷணாமூர்த்தியின் படங்களையும், கோவில் கோபுரங்களில் வண்ண சுதைகளின் மூலமும் காணலாம். தவிர நடைமுறையில் தியானம் செய்பவர்கள் மிக மிக குறைவு. தியானம் இரண்டு வகைய செய்யலாம் என்றும் **முதல் வழி** ஓர் இதமான நல

ஆசனத்தில் நேராக அமர்ந்து முதுகுதண்டு நேர் இருக்கும்படி அமர்தல், இரண்டாவதாக அனந்த சயனம் கொண்டும் செய்யலாம், ஸ்ரீமத் நாராயணன் போல் படுத்துக் கொண்டு, இந்த வழியில் தியானம் செய்த பலர் உறக்கத்தில் சென்று விடுவதால் அனேகர் இவ்வழியில் செல்வது இல்லை.

அதிக நாகரீக ஆண், பெண்கள், மத்தியில் அதிக பணம் கொடுத்து அதிக விளம்பரப்படுத்தும் இடங்களுக்குச் சென்று தியானம் கற்றுக் கொள்வதாக நினைத்து அதற்கான பணமும் கொடுத்து அங்கு சிறிது நேரம் கண்ணை மூடி **தியானம்** செய்து விட்டு, அதற்கு மாறான செயல்களில் மாலையில் ஈடுபடுவது நம் கலாச்சாரத்தில் ஓர் அங்கமாக விளங்குகிறது.

பாமர மக்களோ பக்தியில் இறைவன் தியானம் என்ன? என்று அறியாமல் ஓர் கற்பூரத்தை அவர் கோயிலில் உள்ளேயோ அல்லது வெளியேயோ கதவின் பக்கத்திலே ஏற்றிவிட்டு **"இறைவா என்னை காப்பாற்று"** என்ற ஓர் சொல்லை சொல்லிவிட்டு சென்று விடுவார்கள், எல்லாம் நடந்துவிடும், அந்த ஓர் கற்பூரம் ஏற்றிவிட்டதால் என்ற அசட்டு நம்பிக்கையிலே.

எனது மகாகுரு ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ ஸ்வாமிகள் மகா தேஜோ மண்டலத்தார் தியானத்தினால் ஏற்படும் பலன்கள் யாவை எப்படி செய்வது, எப்போது செய்வது, என்பதை அவர் எழுதிய பாடல்கள் மூலமும், வியாசங்களிலும் படிப்படியாக பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்.

புண்ணிய **சென்னைப்பட்டினத்தில்** இரண்டு **மகா குருமார்கள்** தியானத்தில் அமர்ந்து அடைந்த பலன்கள் என்ன என்பதையும் இங்கு கூற விரும்புகிறேன். இதைப் போல உலகில் பல்வேறு இடங்களில் இவ்வாறு நடந்துள்ளன.

பலகோடி ரூபாய்க்கு அதிபதியான திரு. **பட்டினத்தார்** எல்லாவற்றையும் துறந்து, திரிந்து அவர் தியானத்தை பல வருடங்களாக அனுஷ்டித்தபோது இறைவன் இன்ன இடத்தில் இந்த நேரத்தில் உனக்கு ஜீவன் முக்தி கிடைக்கப்படும் என்று கூறிப்படி திரு. பட்டினத்தார் சென்னையில் வடக்கில் உள்ள திருவொற்றியூர் அடைந்து, அங்கு தியானத்தில் அமர்ந்து இலிங்க உருவமாக மாறி விட்டார் என்பதை இங்கு தெரிவிக்க கடமைபட்டுள்ளேன்.

எனது குருநாதர் அத்தியாச்சிரமி, சுத்தாத்துவைத வைதீக சைவ சித்தாந்த ஞானபானு ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாஸ ஸ்வாமிகள் தியானத்தின் மூலம் சென்னையின் தென் பகுதியில் உள்ள திருவான்மியூரில் பிராணபந்தயோகம் (பிராண பிரதிஷ்டை மூலம்) **தியானலிங்கமாக** அமர்ந்துள்ளார் என்பதை அடியார்கள் இங்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

எனது ஆராய்ச்சியின் மிக முக்கிய காரணம் எனது குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் குமரகுரு தாஸ ஸ்வாமிகள் எப்படி (தியானத்தின் மூலம்) பிரணபிரதிஷ்டையின் மூலம் **தியானலிங்கமாக** அமர்ந்துள்ளார் என்பதை மகாதேஜோ மண்டலத்தார் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு இந்த அவா தோன்றியது அவரின் 13–ம் வயதில் அவரின் முதல் பாடலில் நான் தியானம் செய்தால் எனக்கு என் கைமேல் பலனை நீ தர வேண்டும் என்று முருகனிடம் வேண்டுதலை

வைக்கிறார். தியானத்தின் பெருமையை அதன் பலன் பற்றியும் 25–ம் பாட்டில் தான் முன் பிறப்பிலடைய முடியாத நிலையை இந்த பிறவியில் அடைந்து விட வேண்டும் என்றும், கூறி நம்மை வியப்பில் ஆழ்த்தி அதற்கு தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டும் வந்தார் என்பதை அவர் பாடல்களில் பல இடங்களில் கூறியும் உள்ளார்.

**தியானலிங்கம்** என்றால் என்ன? இம்மாதிரியான இலிங்கம் நம் போன்ற அடியவர்களால் அடைய முடியுமா? செய்து பார்க்கலாமா? முறைகள் யாவை? இவை உண்மையா? எனது குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் சுமார் 30 வருடத்திற்கு முன் **திருராமேஸ்வரத்தில்** உள்ள **அக்னிதீர்த்தத்தில்** மேல் முறைப்படி உபதேசம் பெற்று, சமஸ்கிருதத்தில் உள்ள எல்லா உபநிஷத்துகளையும் கற்று, தமிழில் உள்ள தமிழ் மறைகளை எல்லாம் பயின்று தியானத்தின் மூலம் **இறைவனிடம்** மட்டுமே உபதேசம் பெற வேண்டும் என்று வேண்டி, தான் விரும்பியதை பெற, பல முயற்சிகள் மேற்கொண்டார்.

மக்கள் ஆலயங்களில் வழிபடும் இலிங்கங்களுக்கும், முர்த்தங்களுக்கும் தியான இலிங்கத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களுக்கு சக்தியூட்டபடுவதற்காக, மூலம் மந்திரத்தால் **தினம்** பூஜைகள் செய்வதும், மந்திரங்கள் சொல்லுவதும், மந்திர பிரதிஷ்டை செய்வதால், சிவசக்தி வெளிபட்டு, பிரகாச ரூபமாகவும், அனுக்கிர ரூபமாகவும், பூஜகர்களுக்கு அபிமுகமாதல் யாகசாலை அமைத்தும் ஹோமம் முதலியன செய்தவேண்டும். ப்ரதிஸ்டா விதிக்கு கட்டுபட்டு பூஜைகள் நடத்தவேண்டும்.

ஒவ்வொரு பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் ஒருமுறை கழித்து கும்பாபிஷேகம் போன்றவை நடத்தியும், தொடர்ந்து மந்திரங்கள், பூஜைகள் செய்து வந்தால்தான், விக்கிரகங்களுக்கு சக்தி நிலை நீடித்து நிலைக்கும். ப்ரதிஷ்டா விதிக்கு உட்பட்ட மந்திரங்களை தங்க தகட்டிலோ, செம்பு தகட்டிலோ பொரித்து அந்த அந்த விக்ரங்களின் பீடத்தின் அடியில் மற்ற நவரத்தின கற்களுடன் வைத்து **பந்தனம்** செய்யப்படும். இதற்கு **மந்திர பிரதிஷ்டை** என்று பெயர். இம்மாதிரியான மந்திர இயந்திர பூஜை விதிகள் சரியாக செய்யாவிட்டால் கோயில்களில் பூஜைகள் சரியாக நடக்காது வரும் பக்தர்கள் கூட்டம் குறையும், கோவில் பராமரிக்க கட்ட பணம் வசூல் ஆகாமலும் போகலாம். இப்படி நடப்பதை நீங்கள் தினம் காணலாம், நீங்கள் வசிக்கும் சுற்றுப்புற இடங்களில் உள்ள சிறிய பெரிய கோயில்களில்.

ஆனால் **தியானலிங்கமோ** பிராண பிரதிஷ்டையினால் செய்யப்பட்டது. யோக அறிவில்படி பிராண பிரதிஷ்டை மூலம் ஓர் இடத்திற்கே அல்லது ஓர் பொருளுக்கோ முழுச் சக்தியையும், ஆயுளையும் கொடுத்து பல நூற்றாண்டுகள் நீடிக்கும்படி செய்யப்படுகிறது. இதற்கு உதாரணம் திருப்பழநியில் உள்ள சித்தர் **போகர்** அவர்களால் செய்து வைக்கப்பட்டுள்ள **நவபாஷணத்தில்** உருவாக்கிய **பழநி ஆண்டியின்** சிலைதான். இவ்வகையான பிராண பிரதிஷ்டை செய்யபட்ட தியாலிங்கத்திற்கு **பூஜைகளோ, சடங்குகளோ தேவையில்லை.** அதாவது குடமுழுக்கோ, தூப,

**தீப ஆராதனை, மந்திர, இயந்திர பூஜைகள் தேவைப்படுவது இல்லை.**

தமிழ் மறைகளில், உள்ளம் பெரும் கோவில் ஊனுடன் ஆலயம் இதய கமலமே பீடம் அதன்கண் தீபத்தை போல் ஒளி விடுகின்ற ஆன்மாவே தியானலிங்கம், ஜோதிலிங்கம், குகலிங்கம், என்று அறியப்படுகிறது.

சாதாரணமான பாமரனுக்கு **பிராண பிரதிஷ்டை** தத்துவம் புரியாமல் போவது மட்டுமல்லாமல் பல கேள்விகளும் எழும்பும். யோக மார்க்கத்தில் வந்தவர்களுக்கு தான் இது பளிச் சென்று புரியும்.

தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம், காணாத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாம் தியான சிவலிங்கம். இவற்றை செய்ய ஞானி தன் முயற்சியில் மட்டும் முடிவது இல்லை, அவர்களின் குருவும், அவர் வழிபடும் தெய்வத்தின் துணையுடன் தான் நடக்கும். இது நடக்க பல ஆண்டுகள் நடக்கும், இத்தகைய பிராண பந்தன யோகம் தான் **தியானலிங்கம்** உருவாகும். இவ்வறிய காரியத்திற்காக முயல்கின்ற போது எதிர்ப்புகளும், தடைகளும் தோன்றி கூடவே தீயசக்திகளும், குறுகீடுகளும் ஏற்படும். யோக மரபில் வந்த ஞானிகள் மட்டுமே இவ்வாறு செய்ய இயலும் இந்த தியானலிங்கம் அமைக்கும்பணி இப்பிறப்பில் நடந்து முடிவது அல்ல, எதிர்பாராமல் நடந்தது அல்ல இது பல கடந்த பிறவிகளில் முயற்சியில் நடந்த தொடர்ச்சியே, ஒரு **கிரஹஸ்தனாக** இருந்து **சந்நியாசம்** கொண்டவர்கள் மட்டுமே **தியானலிங்கம்** அமைக்க முடியும் என்று புராணங்கள் கூறுகின்றன.

மகாகுருமார்கள் தன் வாழ்நாளிலும், அதற்கு பிறகும் பல ஆன்மாக்களுக்கு ஒளிவிளக்காகவும், வழிகாட்டியாகவும் இருக்க முடியும். குருவானவர் காலம் காலமாக சக்தியுடன் சக்தி தரும் தியானலிங்கம் உருவாக முடியும் என்பதை நல்ல எண்ணம் கொண்ட மகாகுருவினால் தான் முடியும். இதையே மிகப்பெரிய லட்சியமாக கொண்ட எனது மகாகுரு **ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் பிராண பிரதிஷ்டை மூலம் தியானலிங்கமாக** ஆக ஆசையை உருவாக்கும் பணியில் ஆரம்பம் ஆன காலம் அவரின் **46–**ம் வயதில்

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ ஸ்வாமிகள் **1894** ஆண்டு விஜய வருஷம் பங்குனி மாதம் ஓர் கரியவன் (சனிக்கிழமை) தினத்தில் **13–**ம் நாளில் தனது முன் சிவநிஷ்டையில், ஆண்டவன் இவருக்கு இந்த ஊரில், இன்ன தலத்தில், என்று குறிப்பை அறிவித்தார். அதன்படி இராமநாதபுரத்தில் உள்ள பிரப்பன் வலசை என்ற ஊரின் கண் உள்ள மயானத்தில் அந்த மாவட்ட கலெக்டரிடம் உரிய அனுமதி பெற்று ஓர் கீற்றுக் கொட்டையை அமைத்து அதன் நடுவே ஒருவர் உட்கார்ந்து தியானம் செய்ய அதற்கு ஏற்றால்போல் அளவாக “3 x 3” ஓர் சதுரக்குழி வெட்டி அந்த கீற்று கொட்டகையை சுற்றி நான்கு புறமும் முள் வேலி அமைத்து கதவுடன் பூட்டுயிட்டு அதன் உள் அமர்ந்து ஆண்டவனை நாடி சிவநிஷ்டையை மேற்கொண்டார்.

அப்போது அவரை **சிவநிஷ்டை** செய்யாமல் எழுப்பிட வேண்டும் என்னும் கருத்தாலே ஆணும்,

பெண்ணுமான ஆறு, ஏழு பேய்கள் ஐந்து ஆறு நாட்களாக அவரை எழுப்ப முயற்சி செய்து பிறகு ஓர் பெரிய ஆவி ஒன்றும் அவரை எழுப்பும் முயற்சியில் தோற்று சென்றுவிட்டது. எதற்கும் கலங்காத ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகளின் மனம் அடங்க ஆறு நாட்கள் ஆனது. பிறகு 7வது நாள் இரவில் உபதேசத்திற்கு தகுந்த தருணம் என்று கருதினார் போல் ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் விரும்பி வணங்கும் பழநி முருகனே நேரில் வந்து அவர் காண விரும்பும் வடிவம் கொண்டு ஓர் கையில் தண்டத்துடன், கோவனம் உடுத்து, சின்முத்திரை கையும், புன் முறுவலுடன் அவர் முன் தோன்றி ஓர் **ஞான உபதேசம் செய்தார்.** அவருடன் இருடி இருவர் வந்தனர். அவர்கள் அகத்தியர், வசிஸ்ஷடர் என்று அறியப்படுகிறது நிற்க

ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகளின் யோக குருவாக விளங்கிய **பழநி முருகன்** முதலில் ஸ்வாமிகளுக்கு மூலாதார சக்கரத்தின் மூலம் உச்சந்தலையில் உள்ள சஹஸ்ரஹார சக்கரத்தை தூண்டி சக்தி நிலையை (தியான லிங்கத்துக்குள்) செலுத்தி மூலாதாரத்திற்கும் சஹஸ்ரஹாரத்துக்கும் இடையே உள்ள ஐந்து சக்கரங்களையும் **தூண்டி** மாபெரும் ஆனந்த நிலையை ஏற்படுத்தி அப்படியே அமரும்படி செய்துவிட்டார் (எல்லாம் சூட்சும நிலையில் ஏற்படும் மாற்றங்கள்.)

இவற்றை அனுபவம் மூலம் அறிய இறைவன் அருள் தேவை. இந்த ஆனந்த நிலையுள்ள நம் குருநாதர் எழுந்து விடுவாரோ? அதனால் தான் அதே **சிவநிஷ்டை** நிலையிலே மற்றும் 27 நாட்களையும் கடத்தினார். நமது குருநாதரின் யோக குருவான பழநி முருகன், இவரை நம் உலகுக்கு மீண்டும் கொண்டு வர "நான் தான் ஆணையிடுகிறேன் எழுந்துவிடு" என்று கூறியதை உணர்ந்த பின்பு தான் நமது குரு ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் தான் தவம் செய்த இடத்தை விட்டு எழுந்துவிட்டார்.

ஸ்வாமிகள் மொத்தம் தவம் இருந்த நாட்கள் 35. அவர் எழுந்த அந்த நாள் **சித்திரா பௌர்ணமி** ஆகும். இதில் முக்கிய விவரம் என்னவென்றால் இந்த நிலை அடைந்த பின்னர் ஞானிகள் உலக வாழ்க்கைக்கு வர மனம் வராது. அவர்களை வேறு யாராவது எழுப்ப முயற்சி செய்து இருப்பார்களானால் அம்மகான்கள் தங்கள் உடலையும் துறந்து, அந்த தியான நிலையிலேயே தங்கி விடுவார்கள். அதனால்தான் பழநி முருகன் அவரை நம் உலகுக்கு கொண்டுவரத்தான் சுவாமிகளின் தியானத்தை கலைத்துவிட்டார்.

ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் தியானலிங்கத்தின் மேல் உள்ள நாட்டத்தினால் தான், தனக்கு எதன்மீதும் பற்று இல்லை, என்பதை தான் இயற்றிய பாடல்களில் பல இடங்களில் கூறியுள்ளார். அதாவது கோயில் கட்டுவதும், அறச்சாலைகள் நிறுவதற்கும் தனக்கு உடன்பாடு கிடையாது என்பதை தன் சீடர்களுக்கு கூறியுள்ளார். ஞான வாக்கியத்தில் **"வானம் போல் தியானம் செய்"** என்று மகாதேஜோ மண்டலத்தார்களுக்கு அறிவுருத்தியுள்ளார். **சமாதி என்றால் :** உள்ளென்பதும் புறமென்பதும் இன்றி யாண்டுஞ்செறிந்துள்ள சிவ சோதியிலமுந்திச் சமமாய் நிற்றல். சமாதியில் எட்டு நிலைகளையும் கடந்து அடையும் மகா சமாதி நிலையில் மேன்மை உள்ளது. காரண அறிவு நீக்கினால் வித்தியாசம் இல்லா நிலை எல்லாம் ஒன்றாகி விடுகிறது. ஞானத்தின் மூலம் சாதனைகளை

செய்யும் போது நாம் பல புத்தகங்களையும், வியாபார நிலையங்களில் இயந்திர சக்கரம் அமைத்து வழிபடுவதும் உண்டு.

இப்படி இயந்திர சக்கரங்கள் பூஜிப்பவர்களுக்கு இயந்திர சக்கரங்களின் எப்படி உள்ளே செல்வது? என்றும் மூல தெய்வம் யார்? யார் மூலமாகவும் எப்படி வெளியே வருவது? என்பதை அறியமாட்டார்கள். அதுபோல் சமாதி நிலையிலும் உள்ளே போகவும், வெளியேவரவும் முதலில் குருவின் ஆசிர்வாதத்துடன் நடக்க வேண்டிய விஷயம்! ஆக குருவே வெளியே வரவும் காரணமாக இருப்பார்கள். குரு இல்லாமல் செய்ய முயற்சித்தால் பல வருடங்கள் ஆகிவிடும் பலன் கிட்டலாம், கிட்டாமலும் போகலாம். சமாதி நிலையில் பரிபூரண ஆனந்தம் அடைந்தவர்கள் அதில் மீண்டும் வர விருப்பம் வருவது மிக கடினமான விஷயம்.

நம் போன்றவர்களுக்கு இவைகளை எல்லாம் குழப்பதையும் ஏற்படுத்தும், ஏற்றுக் கொள்ளும் மனமும் இல்லை, காரணம், நாம் இவ்வுலகை காணும் நோக்கு, நடைமுறை எல்லாம் வித்தியாசமானது. நாம் காண்பது எல்லாம் **பொய். பொய். பொய்.** என்று உணர்ந்த நிலையில் தான் உணர முடியும். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையை அடைய விருப்ப உள்ளவர்கள் எல்லோரும் என்போல் அடையலாம் என்று கூறி அதற்கான நல்வழியையும் கூறுகிறார் மகா குரு ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள்.

நமது மகாகுரு ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகளில் உபதேசப்படி முதலில் ஓர் இடத்தில் தினம் 1 மணி நேரமாவது அமர்ந்து எதையும் சிந்திக்காமல் இருக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும், திருமுருகன் திருஅருணகிரிநாதருக்கு உபதேசத்தது போல "சும்மா இரு சொல்லற", என்ற வாக்கியத்துடன், அதனுடன் சாத்திரம், தோத்திரம் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றும் என்று அறிவுரை கூறியுள்ளார். மகாதேஜோ மண்டலத்தார் ஆகிவிட்டால் பல சமயங்களில் இவைகள் எல்லாம் கைகூடும்.

**பௌர்ணமி** நாட்களில் தான் மற்ற நாட்களை விட அதிக சக்தி தூண்டுதல் உந்த பெற்று அபாரசக்தி நிலை கிடைக்க வாய்ப்பு உண்டு. திருஞானசம்பந்த பெருமான் தன் இயற்றிய பதிகங்களில் ஒவ்வொன்றிலும் சோதிலிங்கம் பற்றி ஒன்பதாம் பாடல்களில் தெரிந்துக் கொள்ளலாம்.

சென்னையில் மிக அபூர்வ, தெய்வீக தன்மையுடன் அமைந்துள்ள இடங்கள் இரண்டு. ஒன்று **திருவெற்றியூரில்** உள்ள சுயம்பாக இருக்கும் சிவலிங்கம் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சிவாலயம். அவ்வாலயத்தின் வடகிழக்கில் அமைந்துள்ளது இது திரு. பட்டினத்தார் சமாதி. இரண்டவதாக **திருவான்மியூரில்** சுயமாக அமைந்துள்ள சிவலிங்க ஆலயம். இவ்வாலயத்தின் வடகிழக்கில் உள்ளது ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகளின் சமாதி. இவ்விரண்டு சிவாலயங்களுக்கு நடுவே திருஞானசம்மந்தர் பாடல் பாடி குடத்தில் இருந்த எலும்பு பெண் உருவமாக வந்த திருமயிலை சிவாலயம் உள்ளது. பிரணவ பரம்பரை சார்ந்த ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ சுவாமிகளும் இவ்வாறு **பிராண பிரதிஷ்டை மூலம் தியான இலிங்க வடிவமாக சென்னையில் உள்ள திருவான்மையூர் மயூரபுரத்தில்,** தன் செலவில் நிலம் வாங்கி அதில் அமர்ந்து உள்ளார். இவை எல்லோருக்கும்

தெரிந்த உண்மை. தியான லிங்கத்தை பற்றிய ஆதாரங்கள் அவர் இயற்றிய பாடல்களிலும் திருமூலர் பாடல்களில் சுலபமாக கண்டு கொள்ளலாம்.

பல வேதங்கள் பயின்று யோக மார்க்கத்தை அடைய விரும்புபவர்களும், ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ ஸ்வாமிகளை தங்கள் **குருவாக** முழு மனத்துடன் ஏற்றுக்கொண்டு இக்குருவின் வழிப்படி நடக்கும் எண்ணம் கொண்டவர்களும் புற பூஜைகளை விட்டு (குறைத்து) அகப்பூஜையை மட்டும் அதிகமாக செய்து மகா தேஜோ .மண்டத்தர் ஆக நினைக்கும் அரிய நிலையை பெற நினைக்கும் அடியார் கூட்டத்திற்கு இவை இலகுவாக தெரியும், தெளியும்.

**குரு** ஸ்தூல உடம்பில் இருக்கிறவர் மட்டும் அல்ல எங்கேயோ வாழ்கின்ற மனிதர் மட்டும் அல்ல அதனால் நாம் எந்த நேரமும் அவரை விட்டு பிரியாத ஓர் மனநிலையில் நாம் இருக்க வேண்டும்.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுரு தாஸ ஸ்வாமிகள் அருளிய

## சுப்பரமணிய வியாசம்

யோக சித்தியில் பிரம்ம ரத்தத்தில் அடங்கியபின் சமாதி குழிக்குள் வைக்கப்பட்டவரும் உயிரோடு சமாதி குழிக்குள் இருக்க மூடப்பட்டவரும், எக்காலத்திலேயும் வெளிப்பட கூடியவர் என்றும், யோகத்திற் கபாலந்திறந்தேகினார் வேறொரு சுத்தவடிவஞ் சேர்ந்தாரென்றும் அறிக. ஸ்ரீ பரமபதியுடைய கைலாயத்திற்கும் போக்குவரவாயுள்ள சிவபதிகளாகிய முனீஸ்வரனையும் என்றும் ஜீவன் முகத்தர்கள் என்று எண்ணுக

## சிவ ஞானதீபம்

ஞான யோகத்தாலுள்ளடங்கிப் பூவுழைக்கனன சமாதி செய்யப்பட்டுளர்களும், சிவலிங்காதாரமாச் சமைத்துளர்களும் உயர்ந்த சீவன் முத்தியிலுள்ளவர்களே பரமுத்தியுமங்ஙனமாம் அத்தகைய சன்னிதிகளில் ஈசுரபிரபாவமுண்டு அதனானே அச்சன்னிதியின் முற்று பெறுமாறு முற்றும் பெறும். பாமுத்தி ஈசுரப்பிரவாகமின்று அதனால் அஞ்ஞாலங்களில் யாதொரு சித்தியுமுண்டாதலில்லை சித்திக்கு மேற்பட்டதே முத்தியும், சித்திக்கு கீழ்பட்டதே பெத்தமுமென்ப


BAY OF BENGAL
N
W
E
S

அன்பர்கள் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ சுவாமிகள் வசித்து வந்த வடசென்னையில் உள்ள மண்ணடியில் உள்ள நம்புல்லையர் தெரு 39ம் எண்ணுள்ள நிலையத்தில் சுவாமிகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் 29–5–1929 தமிழில் பச்சைக்கிழமை என்னும் வழங்கும் புதன் கிழமை அன்று இரவு 2 மணிவரை உரையாடினார்கள். அதன்பின் சுவாமிகள் திருவாய் மொழி கேட்கக் கூடாது போயிற்று. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் நிட்டை கூடினார்கள். தமிழில் பொன்கிழமை எனப்படும் வியாழன் அன்று காலை 7.15 மணிக்கு மலர்ந்த முகத்தோடு சுவாமிகள் பொலிருந்த வேலையில், சுவாமிகள் சமாதி நிலை அடைந்தார். ஸ்வாமிகள் சமாதி அடைந்த நிலையை அருகில் உள்ள சில சீடர்கள் மற்றவர்களுக்கு சமாதி அடைந்த செய்தியை தெரிவிக்க, அச்செய்தி செய்தி துண்டு வெளியீடுகள் மூலமாகவும், தந்தி வாயிலாகவும், பத்திரிக்கைகள் வாயிலாகவும், நாலா பக்கமும் பரவிற்று. சுவாமிகள் சமாதி அடைந்த செய்தி தெரிந்த மக்கள் கூட்டங்கூட்டமாகத் திரண்டு வந்து சுவாமிகளை வணங்கிச் சென்றார்கள். காலை முதல் ஜனக்கூட்ட நெருக்கை சுவாமிகள் வசித்திருந்த நிலையம் கொள்ளாமையாற் வாயிற்படியில் ஒருவரிருந்து கூட்டத்தை அளவுபடுத்தி விட்டுக் கொண்டிருக்க நேர்ந்தது / இரவு 12 மணி வரையும் ஜனக்கூட்டம் பெருகி கொண்டேயிருந்தது. இரவு 12 மணிக்குச் சுவாமிகள் திருமேனிக்கு அபிஷேகம் செய்யத் துவங்கப்பட்டது. 30–5–1929 வெள்ளிக்கிழமை காலை 3 மணிக்கு வழிபாடு முடிவுற்றது.

வடசென்னையில் உள்ள மண்ணடியில் 3.30 மணிக்குச் சுவாமிகளுக்கென்று வெற்றிவேராலும், பூக்களாலும், அலங்கரிக்கப் பெற்றிருந்த விமானத்தில் சுவாமிகள் திரு உடல் அமர்த்தப்பட்டது. ஊர்வலம் செல்ல முடியாமல் வடசென்னையில் உள்ள மண்ணடியில் உள்ள நம்புல்லையர் தெருவை ஜனக்கூட்டம் அடைத்து கொண்டது. வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு புறப்பட்ட ஊர்வலம் இராயப்பேட்டை வர மாலை 5.00 மணியாயிற்று.

புதுப்பாக்கத்தில் **ஸ்ரீ சிவசுப்பிரமணிய சபையாரும்**, இராயப்பேட்டையில் **ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையாரும்** பிறகு சுவாமிகள் திருமேனிக்குப் பூமாலைகள் சூட்டித் தீபாராதனை செய்து வணங்கினர். இங்ஙனே ஊர்வலம் தொடங்கி இடமுதல் திருவான்மியூர் செல்லும் வரை வழி நெடுக ஆங்காங்குத் தீபாராதனையும் வந்தனை வழிபாடுகளும் செய்யப்பட்டன. ஊர்வலம் இரவு 8.00 மணிக்குத் திருவான்மியூர் சென்றடைந்தது. அங்குச் சுவாமிகளால் பத்துநாட்களுக்கு முன் குறிக்கப்பட்டு விலைக்கு எடுக்கப்பட்டிருந்த 2 1/4 காணி மணல் நிலப்பரப்பில் ஒரு பகுதியில் கட்டப்பட்டிருந்த சமாதி குழியில் மூட்டைக்கணக்கான விபூதியையும் மணக்கும் கற்பூரத்தையும் கொட்டி அதன் மேல் சுவாமிகள் திருமேனி வைக்கப்பட்ட நாள் 31–5–1929 வெள்ளிக்கிழமை.

ஆதார குறிப்பு : நவசக்தி செய்தி தாளின் 5–6–1929